**அநுராதபுரம் மாநகர சபை**
**அநுராதபுரம் மாவட்டம்**

----------------------------

## 01. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 ஆகஸ்ட் 27 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தம்பர் 22 ஆந் திகதியும் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக அநுராதபுரம் மாநகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான நியாயமான நிலைமையொன்றை வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் நிலையான வைப்பு பிணையாக வைக்கப்பட்டு பெறப்பட்ட ரூபா. 14,400,000 கடன் தொகையில் செலவு மீதியான ரூபா. 12,969,209 நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இணங்குகின்றேன். |
| (ii) | கழிவுப் பொருள் எரியுமிடம் நிர்மாணிக்கும் போது செயலாற்றல் முகவர் மூலம் கிடைத்திருந்த ரூபா. 4,250,000 தொகை மத்திய அரசிடமிருந்து கிடைத்த மூலதன வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இணங்குகின்றேன். |
| (iii) | 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையான மற்றும் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஜுன் மாதம் வரையான காலத்தில் இடம் பெற்ற நிதி முறைகேடுகளுக்கு காரணமான | பணம் அறவிடப்பட வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட்டு பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | மதிப்பீட்டு அறிக்கையின் படி சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | தரப்பினரிடமிருநது சபைக்கு அறவிடப்பட வேண்டியதில் ரூபா. 6,322,303 மற்றும் ரூபா. 40,852,190 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (iv) | அநுராதபுரம் மாநகர சபையில் சேவையாற்றிய 2013 ஆகஸ்ட் மாதம் மாகாண பொறியியற் திணைக்களத்திற்கு இடம் மாற்றம் பெற்றுச் சென்ற ஊழியர் ஒருவருக்கு 2018 ஜூன் மாதம் வரை முறையற்ற விதத்தில் வழங்கப்பட்டிருந்த ரூபா. 1,816,557 சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் பெற வேண்டிய தொகையாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பணம் அறவிடப்பட வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட்டு பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் இணங் காணப்பட்ட பெறுமதி கணக்கீடு செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படும். |
| (v) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை இலங்கை வங்கியின் கடன் தவணை மற்றும் வட்டி கொடுப்பனவு ரூபா. 2,607,434 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இணங்குகின்றேன். |
| (vi) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் மாநகர சபைக்கு சொந்தமான 02 நடைமுறைக் கணக்குகள் தொடர்பான கொடுப்பனவு ரூபா. 4,788,730 இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் வங்கி இணக்கக் கூற்று மற்றும் நிதி நிலுவைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மாற்றங்களுக்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (vii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் 04 நடைமுறைக் கணக்குகளுக்கு பெறப்பட்ட ரூபா. 1,839,183 இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் வங்கி இணக்கக் கூற்று மற்றும் காசு மீதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மாற்றங்களுக்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (viii) | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் பயன்படுத்தப்பட்டிருந்த 13 நாட்குறிப்பு பதிவுகளின் வரவுப் பெறுமதி ரூபா. 151,314,830 மற்றும் செலவுப் பெறுமதி ரூபா. 86,378,799 என்பன உரிய கணக்குகளில் காண்பிக்கப்படுவதற்குப் பதிலாக வரவு வேறுபாட்டின் பெறுமதி ரூபா. 64,936,031 தொகை ஏனைய செலவினமாக காட்டப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் நிதிக் கூற்றுக்களில் கணக்காண்டிற்குரியதாக மேற்கொள்ளப்படும் நாட்குறிப்பு பதிவுகளில் காட்டப்பட்டிருக்கின்ற கொடுக்கல் வாங்கல்கள் நிதிக் கூற்றுக்களில் பதிவு செய்யும் போது உரிய வருமானம், செலவினம் மற்றும் சொத்துக்கள் கணக்குகளில் பதிவு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (ix) | பிரதான காரியாலயம், வாசிகசாலை கட்டிடம், சுடலைச்சாலை, 135 ஏனைய கட்டங்கள் மற்றும் சகல காணிகளினதும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | உரிய பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | பெறுமதிகள் புதிய கணக்கியல் தரத்திற்கு அமைய 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுப்பேன். |
| (x) | கடந்த பல ஆண்டுகளாக வழங்கப்பட்ட ஆனால் செலுத்துவதற்காக முன்வைக்கப்படாத 02 நடைமுறைக் கணக்குகளின் ரூபா. 2,188,931 பெறுமதியுடைய காசோலைகளின் பெறுமதி மீளாய்வாண்டின் வேறு வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இக் காசோலைகளின் பெறுமதி செலவின மிகைத் தலைப்பின் கீழ் மாற்றங்களின் சீர் செய்யப்பட வேண்டும். |
| (xi) | ஏனைய நிறுவனங்களின் நிதிஏற்பாடுகளின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த ரூபா. 5,907,104 பெறுமதியுடைய 09 செயற்திட்டங்கள் கடன்கொடுத்தோராக காண்பிக்கப்பட்டிருந்த போதும் கடன்பட்டோர் தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் தொழில் கடன் வழங்குனர்கள் மற்றும் கடனாளர்கள் கணக்குகள் உள்ளடக்கப்பட நடவடிக்கை எடுப்பேன். |
| (xii) | மீளாய்வாண்டின் வார சந்தை வருமானம் ரூபா. 7,791,314 நிதிக் கூற்றுக்களில் ரூபா. 7,545,975 எனக் காட்டப்பட்டிருந்ததால் ரூபா. 245,339 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் பணமாகப் பெறுதல் மட்டும் பதிவு செய்யப்பட்டுள்ளது. நிலுவை பெறுவனவு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. நாட்குறிப்பு மூலம் இத திருத்தம் செய்யப்பட்டுள்ளது |

| | | | |
|---|---|---|---|
| (xiii) | மீளாய்வாண்டின் கேள்வி கோரப்பட்ட வாகனத் தரிப்பிடங்களைக் குத்தகைக்கு விடல் மற்றும் சபை முலம் நடாத்திச் செல்லப்பட்டு வந்த வாகனத் தரிப்பிடங்களுக்கான வருமானம் ரூபா. 7,073,299 நிதிக் கூற்றுக்களில் ரூபா. 5,695,893 எனக் காட்டப்பட்டிருப்பதனால் ரூபா. 1,377,406 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நிதிக் கூற்றுக்களுக்கு அமைய நகர சபை மூலம் பராமரிக்கப்பட்டு வந்த வாகனத் தரிப்பிடத்திற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் ரூபா. 2,260,440 ஆகும். வாகனத் தரிப்பிடத்தை குத்தகைக்கு விடுவதன் மூலம் கிடைத்த வருமானம் ரூபா. 3,435,452 ஆகும். |
| (xiv) | மீளாய்வாண்டின் மீன் கடைகளுக்கான பட்டியல் பிரகாரம் கேள்வி வருமானம் ரூபா. 1,510,770 மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா. 3,389,152 ஆக இருந்தமையால் ரூபா. 1,878,382 கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களில் மீன் கடைகளுக்கான கேள்வி ஆவணத்தின் பிரகாரம் மீன் கடைகளுக்கான சிட்டையிடப்பட்ட வருமானம் சீராக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும். |
| (xv) | மீளாய்வாண்டின் பொசன் களியாட்டத்திற்கான பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா. 20,658,539 மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா. 21,853,522 ஆகவும் இருந்தமையால் ரூபா. 1,194,983 கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த பொசன் களியாட்டத்திற்கான வருமானம், வருமான அறிக்கையின் பிரகாரம் சரியானதாகும். எதிர்வரும் காலங்களில் உரிய அட்டவணைகள் தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (xvi) | மீளாய்வாண்டின் பல்வேறு முற்பண தீர்ப்பனவு ரூபா. 2,988,781 உரிய கணக்குகளுக்கு வரவு வைப்பதற்குப் பதிலாக காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கணக்கு இலக்கம் 1847 இற்குரிய குறுக்குப் பதிவு பெறுகை காசு மீதியில் உள்ளடக்கப்படவில்லை. அதனால் முற்பண தீர்ப்பனவு குறுக்குப் பதிவு மூலம் காசேட்டில் மீதிக்கு சீராக்கம் செய்யப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (xvii) | உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்தின் மீளாய்வாண்டின் கடன் வட்டி ரூபா. 2,943,731 நிதிக் கூற்றுக்களில் ரூபா. 2,447,323 எனக் காட்டப்பட்டிருப்பதால் ரூபா. 496,408 குறைவாகக் காட்டப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்தின் கடன் மீதி அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கடன் மீதி வட்டித் தொகை ஒப்பீடு செய்யப்பட்டு வேறுபாடுகள் காணப்பட்டால் எதிர்வரும் நிதிக் கூற்றுக்களில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (xviii) | நானாவித முற்பணம் செலுத்தல்களுக்கான ரூபா. 2,165,800 தொகை மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்ததன் தவறு மீளாய்வாண்டில் சீர்செய்யும் போது உரிய மீண்டெழும் செலவினக் கணக்கு செலவு வைப்பதற்குப் பதிலாக காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இணங்குகின்றேன். |
| (xix) | மீளாய்வாண்டின் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா. 2,365,599 நிதிக் கூற்றுக்களில் ரூபா. 3,115,094 எனக் காட்டப்பட்டிருந்தமையால் ரூபா. 749,495 கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இணங்குகின்றேன். |
| (xx) | மீளாய்வாண்டின் மல அகற்றலுக்கான வரி பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா. 10,242,725 நிதிக்கூற்றுக்களில் ரூபா. 10,887,095 எனக் காட்டப்பட்டிருந்தமையால் ரூபா. 644,370 கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இணங்குகின்றேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் 10 கணக்கு விடயங்களின் பெறுமதி உப அட்டவணையின் பிரகாரம் ரூபா. 52,643,535 மற்றும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா. 53,281,581 ஆக இருந்தமையால் ரூபா. 5,268,628 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | வேறுபாடுகள் ஒப்பிடப்பட்டு கணக்குகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி மற்றும் அட்டவணைகளின் பிரகாரம் மீதிகளை சீராக்கி சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் 06 நடைமுறைக் கணக்குகளுடன் தொடர்புடைய பொழிப்புக் காசேடு மற்றும் வங்கி இணக்கக் கூற்றுயின் பிரகாரம் காசேடுகளின் மீதி பெறுமதி ரூபா. 10,781,849 ஆகவும் அத் தினத்தில் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அந் நடைமுறைக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள பணப் புத்தகங்களின் மொத்த மீதி பெறுமதி ரூபா. 18,376,498 ஆகவும் இருந்தமையால் ரூபா. 7,594,649 வேறுபாடொன்று இருந்தது. | வேறுபாடுகள் ஒப்பிடப்பட்டு கணக்குகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிக் கூற்றுக்களை தயாரித்ததன் பின் ஒவ்வொரு நடைமுறைக் கணக்குகளுடன் தொடர்புடைய வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. உரிய மாற்றங்கள் நிதிக் கூற்றுக்களின் நடைமுறைக் கணக்குகளில் ஏற்படாமையினால் 2020 ஆம் ஆண்டின் கணக்குகளில் இம் மீதி சீர் செய்யப்பட்டு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் 03 நடைமுறைக் கணக்குகள் தொடர்பான மாதாந்த வங்கி இணக்கக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள வங்கி மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா. 6,942,582 ஆகவும் அத் தினத்தில் வங்கி மீதி உறுதிப்படுத்தும் கடிதங்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுப் பெறுமதி ரூபா. 3,132,415 ஆகவும் இருப்பதால் ரூபா. 3.810,167 வேறுபாடொன்று இருந்தது. | வேறுபாடுகள் ஒப்பிடப்பட்டு கணக்குகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சீர் செய்யப்படும். |
| (iv) | மீளாய்வாண்டின் பிரதான பேரேட்டில் 05 வருமானக் கணக்குகளின் கூட்டுப் பெறுமதி ரூபா. 254,140,668 மற்றும் நிதிச் செயற்பாட்டு அறிக்கையில் ரூபா. 259,004,923 எனவும் இருந்தமையால் ரூபா. 18,345,297 மொத்த வேறுபாடொன்று இருந்தது. | வேறுபாடுகள் ஒப்பிடப்பட்டு கணக்குகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருமான வகைகளாக கணக்குகளை தயாரிக்கும் போது இம் மாற்றம் ஏற்பட்டுள்ளது. |
| (v) | மீளாய்வாண்டின் பிரதான பேரேட்டில் 12 செலவினக் கணக்குகளின் கூட்டுப் பெறுமதி ரூபா. 600,116,635 மற்றும் நிதிச் செயற்பாட்டு அறிக்கையில் ரூபா. 603,512,565 எனவும் இருந்தமையால் ரூபா. 13,673,580 மொத்த வேறுபாடொன்று இருந்தது. | வேறுபாடுகள் ஒப்பிடப்பட்டு கணக்குகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (vi) | 2018 திசெம்பர் 31 இல் ஐந்தொகையில் காட்டப்படாத ரூபா. 242,741 ஆன 02 செலவினங்கள் மீளாய்வாண்டின் ஆரம்ப நிலுவைகளாகக் கொண்டு வரப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டுகளின் கணக்குகளுடன் ஒப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்கள் சரியாக சீராக்கப்பட வேண்டும். | எதிர்வரும் கணக்கு ஆண்டில் இக் குறை ஏற்படாமலிருக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vii) | 2019 திசெம்பர் 31 இல் தேசிய சேமிப்பு வங்கியில் 200051006126 ஆம் இலக்க நிலையான வைப்பில் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா. 1,865,959 ஆகவும் அத்தினத்தில் மீதி உறுதிப்படுத்தல் பிரகாரம் பெறுமதி ரூபா. 1,688,651 ஆகவும் இருந்ததால் ரூபா. 177,308 வேறுபாடொன்று இருந்தது. | வேறுபாடுகள் ஒப்பிடப்பட்டு கணக்குகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் கணக்கு ஆண்டில் இக் குறை ஏற்படாமலிருக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (viii) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் 06 கடன் மீதிகளின் நிதிக் கூற்றுக்களுக்கமைய பெறுமதி ரூபா. 24,027,128 ஆகவும் அத்தினத்தில் மீதி உறுதிப்படுத்தல் பிரகாரம் கடன் மீதிகளின் பெறுமதி ரூபா. 25,785,351ஆகவும் இருந்ததால் ரூபா. 7,896,201 மொத்த வேறுபாடொன்று இருந்தது. | வேறுபாடுகள் ஒப்பிடப்பட்டு கணக்குகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் கணக்குகளுடன் உரிய மீதி வேறுபாடுகள் பரீட்சிக்கப்பட்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ix) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் ரூபா. 28,532,932 ஆகவும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா. 23,704,368 ஆகவும் இருந்ததால் ரூபா. 4,828,564 வித்தியாசம் மற்றும் வேறு திணைக்களங்களிற்கு செலுத்த வேண்டிய கடன் ரூபா. 3,193,730 ஆகவும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா. 1,661,849 ஆகவும் இருந்ததால் ரூபா. 1,531,881 வித்தியாசம் இருந்தது. | வேறுபாடுகள் ஒப்பிடப்பட்டு கணக்குகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 வரையில் 2014 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான கணக்காய்வுக் கட்டணங்கள் ரூபா. 3,370,050 தீரவு செய்யப்பட்டிருக்க வில்லை. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொதுச் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் மாதாந்தம் ஒரு இலட்சம் ரூபா வீதம் செலுத்தி முடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 வரையில் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான தீர்க்கப்படாத பல்வேறு கடன் பணம் ரூபா. 135,455,780 ஆக இருந்தது. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இக் கடன் கொடுத்தோர் நிலுவையில் ரூபா. 43,754,556 இது வரையில் தீர்க்கப்பட்டுள்ளது. மீதிக் கடன் தீர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஈ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா. 737,597,791 பெறுமதியான 19 கணக்கு விடயங்கள் தொடர்பாக ஏற்றுக் கொள்ளக்கூடிய சான்றுகள் முன்வைக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற பெறுமதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இணங்குகின்றேன். |
| (ii) | முத்திரைக் கட்டண வருமானம் தெளிவாக இனங்காணப்படும் வகையில் முத்திரை வருமான ஆவணமொன்று முறையாக செயற்படுத்தப்படவில்லை. நிலுவை முத்திரைக் கட்டணம் அல்லது குறைந்த ஒதுக்கீடு அல்லது நிலுவை வருமானம் தெளிவாக இனங்காண முடியாதிருந்தது. | ஆவணம் முறையாக செயற்படுத்தப்பட வேண்டும். | முறையான ஆவணமொன்று தயாரிக்கப்பட்டு 2020.08.31 ஆம் திகதிக்கு முன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் திரண்ட நிதியத்திற்கு எதிராக எழுதப்பட்டிருந்த ஊழியர் கடன் ரூபா. 3,661,688 தொடர்பான | உரிய சரியான விரிவான தகவல் முன்வைக்கப்பட வேண்டும். | நீண்ட காலமாக இடம் பெற்ற நிதிக் கூற்றுக்களுக்கு அமைய ஊழியர் கடன் மீதி 2019.12.31 இல் ஊழியர் கடன் உப |

| | | | |
|---|---|---|---|
| | விரிவான தகவல் மற்றும் அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்களை பதிவழிப்பதற்கு காரணம் சமர்ப்பிக்கப்படவில்லை. | | அட்டவணை நிலுவையுடன் ஒப்பிடப்பட்டு ஆரம்ப மீதியில் காணப்பட்ட வேறுபாடு தீர்க்கப்படல். |
| (iv) | நடைமுறைக் கணக்கு இலக்கம் 0076677550 இல் 2019 ஜனவரி மற்றும் மார்ச் தொடக்கம் ஆகஸ்ட் வரையான வங்கி இணக்க கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | மாதாந்த வங்கி இணக்கக் கூற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். | வங்கி அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டு வங்கி இணக்க கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (v) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் நிதிக் கூற்றுக்களில் 07 காசுக் கணக்குகளிற்கு ரூபா. 19,667,827 பெறுமதி காட்டப்பட்டிருந்தாலும் அங்கு உள்ளடக்கத்தைக் காட்டுகின்ற விரிவான அட்டவணை சமர்ப்பிக்கப்படவில்லை. | விரிவான அட்டவணை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சகல நடைமுறைக் கணக்குகள் தொடர்பான பொது 58 மாதிரிக்கு அமைய தயாரிக்கப்படுகின்ற காசேடு மற்றும் பொழிப்புப் காசேடு தயாரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும். அவை கணக்காய்வின் மூலம் வேண்டப்படுகின்ற எந்த சந்தர்ப்பத்திலும் வழங்க முடியுமென்பதை அறியத் தருகிறேன். |
| (vi) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் சபைக்கு எதிராக வெளித் தரப்பினர் மற்றும் சபை மூலம் வெளித் தரப்பினருக்கு பொறுப்புச் சாட்டப்பட்ட வழக்கு தொடர்பான விபரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்விற்கு அவசியமான தகவல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | வழக்கு ஆவணம் சபையின் சட்டப் பிரிவின் பொறுப்பில் உள்ளது. எனினும் எந்த சந்தர்ப்பத்திலும் பரீட்சிக்கலாம். |
| (vii) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா. 16,953,617 உடைய நிலையான வைப்புப் பெறுமதி தொடர்பான மீதி உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்படவில்லை. | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டிற்குரிய கணக்கு தயாரிக்கும் சந்தர்ப்பத்திலேயே இம் மீதி உறுதிப்படுத்தல் அறிக்கை உரிய நிறுவனம் மூலம் பெற்றுக் கொள்ள விடய எழுதுவினைஞர் அறிவுருத்தப்பட்டுள்ளார். |

| | | | |
|---|---|---|---|
| (viii) | 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஜுன் வரையான காலத்தினுள் இடம் பெற்ற சுமார் ரூபா. 40,820,190 சம்பள மோசடியின் சரியான பெறுமதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவசியமான சம்பள மற்றும் கொடுப்பனவு வங்கி அனுப்புகை விபரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இது தொடர்பான ஆரம்ப மதிப்பீடு நடாத்துமாறு உள்ளூராட்சி ஆணையாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அவ் ஆரம்ப மதிப்பீடு முடிவடைந்ததன் பின் இவ் விபரம் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ix) | குத்தகைக்கு விடப்பட்டிருந்த 02 பொது வியாபார நிலையக் கடைகள் சபையின் அங்கீகாரம் இன்றி பழுது பார்ப்பதில் வரி செலுத்துவோர் மூலம் செலுத்தப்பட்ட ரூபா. 1,049,629 பெறுமதி பெற வேண்டிய வாடகையில் எழுதப்பட்டு இருந்தாலும் செய்து முடிக்கப்பட்டிருந்த வேலையின் அளவு மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட பெறுமதி காட்டுகின்ற தொழில்நுட்ப அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | உரிய பெறுமதி உறுதிப்படுத்திக் கொள்ள தொழில்நுட்ப அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பொது வியாபார நிலைய இலக்கம் 42 கல்வி மற்றும் தொழில் நிறுவனத்தில் பழுது பார்ப்பதில் வரி செலுத்துவோருக்கு செலவிடப்பட்ட பணம் தொழில்நுட்ப அறிக்கை மற்றும் சபை தீர்மானத்தின் படி உரிய நிலுவைப் பணம் நீக்கப்பட்டுள்ளது. |

1.4 **இணங்காமைகள்**

--------------------

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. | | | |
| (அ) | மாநகர சபை கட்டளைச் சட்டம் | | | | |
| | 266 ஆம் பிரிவு | 6,751,514 | சபை அங்கீகாரம் மற்றும் விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் இன்றி 03 வருமான விடயங்களில் பெற வேண்டிய வருமானம் பதிவழிக்கப்பட்டிருந்தன | மாநகர சபை கட்டளைச் சட்டத்தன் உரிய பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | பதிலளிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை<br>-----------------------<br>xix ஆம் அத்தியாயம் 5 ஆம் பிரிவு | | முன்னால் மாநகர ஆணையாளர் அரச வீட்டில் தங்கியிருந்தமையால் 2009 செப்தெம்பர் முதல் 2016 ஜுன் வரை அறவிடப்பட வேண்டிய வீட்டு வாடகை ரூபா. 205,750 அறவிடப்படவில்லை. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | பதிலளிக்கப்படவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>------------------------- | | | | |
| | (i) நி.பி 189 | 1,807,152 | 2000 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஏப்ரல் வரையான காலத்தில் 05 நடைமுறைக் கணக்குகளின் ரூபா. 248,600 பெறுமதியான மறுக்கப்பட்ட காசோலை மற்றும் 20 காசுக் கட்டளை சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படாததுடன் 2001-2019 வரையான காலத்தில் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள காசோலை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | மறுக்கப்பட்ட காசோலை தொடர்பாக நி.பி 169 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) நி.பி. 396 | 162,255 | 02 நடைமுறைக் கணக்குகளின் வழங்கப்பட்ட மற்றும் செலுத்துவதற்கு சமர்ப்பிக்கப்படாத செல்லுபடியாகும் காலவரையரை மீறிய ரூபா. 162,255 உடைய 23 காசோலைகள் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | செலுத்துவதற்கு சமர்ப்பிக்கப்படாத 23 காசோலைகள் தொடர்பாக நி.பி. 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| | (iii) | நி.பி. 571(i) | | 2019 திசெம்பர் 31 இல் ரூபா. 110,650,744 ஆன வைப்புக்களில் முன்னைய வைப்புக்கள் இனங்காணப்பட்டு உரிய பட்டியல்கள் தயாரிக்கப்பட வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வைப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| | (iv) | நி.பி. 702(3) | | மீளாய்வாண்டிற்குரிய ஒப்பந்தங்களின் முலப்பிரதி கணக்காய்வாளரிற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒப்பந்தங்களின் மூலப்பிரதி எதிர்வரும் காலத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ஈ) | அரச பெறுகை வழிகாட்டி மற்றும் செயற்பாட்டுக் கோவை ---------------------- | | | | | |
| | (i) | 2.8.1 ஆம் பிரிவு | 41,686,476 | மாநகர சபையின் 04 தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களிற்காக துறைசார் நிபுணர்கள் தொடர்பு கொள்ளப்படவில்லை. | குறிப்பிட்ட செயற்பாடுகளுக் காக துறைசார் நிபுணர்கள் தொடர்பு கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | துறைசார் நிபுணர்களின் பங்களிப்பின்றி நகர பொறியியலாளரின் பரிந்துரையின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| | (ii) | 5.1 ஆம் பிரிவு | 32,700,000 | தொழில்நுட்ப விவரக் குறிப்புகள், அளவு கோல்கள் மற்றும் தேவையான குறைந்தபட்ச தரங்கள் குறிப்பிடப்படாது கழிவு எரிக்கும் இயந்திரம் மற்றும் சூரிய சக்தி அமைப்புக்களை கொள்வனவு செய்வதற்காக ஏல ஆவணங்கள் தயாரிக்கப்பட்டது. | இவ்வாறான நடவடிக்கைகளு க்காக முறையான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் மற்றும் கொள்வனவு வழிகாட்டல்களி ன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிபுணர் ஒருவரின் தொடர்பின்றி நகர பொறியியலாளரின் பரிந்துரையின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது . |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iii) | 5.4.4 ஆம் பிரிவு | 1,700,000 | திண்மக் கழிவுகள் எரிக்கும் இயந்திரமொன்று உருவாக்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்திற்கு முற்பணம் வழங்கும் போது செயற்றிட்ட பெறுமதியின் 30 சதவீதத்தை வேலை முற்பணம் செலுத்துவதற்குப் பதிலாக முற்பண பாதுகாப்பு இன்றி 50 சதவீதம் செலுத்தப்பட்டிருந்தது. | அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது மிக விரைவாக இணைக்கப்பட வேண்டுமெனவும் உரிய நிறுவனத்திற்கு 30% முற்பணத்தில் நிறைவு செய்ய முடியாமையால் 50% முற்பணம் அவசியமென அறியத் தந்தமையால் உரிய கொடுப்பனவு சபையால் தீர்மானிக்கப்பட்டது. |
| (iv) | அத்தியாயம் 6.2.2 | 8,500,000 | திண்மக் கழிவுகள் எரிப்பதற்காக இயந்திரமொன்று நிர்மாணிப்பதற்கான கொள்முதல் ஏலம் சமர்ப்பிக்கப்படுவதற்கு 21 நாட்கள் குறைந்தபட்ச காலம் வழங்கப்படவில்லை. | அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறைந்த காலத்தினுள் தீர்க்கப்பட வேண்டிய குறிப்பிட்ட பிரச்சினைக்கு ஆலோசனை கோரப்பட்டதால் 16 நாட்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டு ஆலோசனை கோரப்பட்டது. |
| (v) | அத்தியாயம் 7.1, 7.7, 7.8 | 32,700,000 | கழிவுப் பொருட்கள் எரிக்குமிடம் மற்றும் சூரிய சக்தி நிலையம் அமைக்கப்பட்டு சேவையின் பின்னர் உத்தரவாதம் மற்றும் சேவை நியதிகள் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட வில்லை. | அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் உரிய அத்தியாயத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உத்தரவாதம் மற்றும் சேவை தொடர்பான ஒப்பந்தங்களுக்கு (சமர்ப்பிக்கப்பட்டதன் பிரகாரம்) அமைய அமைக்கப்பட்டு முடிந்ததன் பின் ஒப்பந்தங்களுக்கு அனுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (vi) | 3.10 பிரிவு | 7,499,996 | முன் அலுவலகம் நிர்மாணிப்பதற்கான ஏல நடைமுறையில் இரட்டை ஏல முறை பின்பற்றப்படவில்லை. | அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின உரிய பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் அத்தியாயத்தில் நிர்மாணிக்கப்பட்ட சுயாதீன நிறுவனமொன்றாக அதன்படி மாநகர சபை நிதியத்தின் பொருள் மற்றும் சேவை பெற்றுக் கொள்வதற்கு செயற்படுகின்ற திட்டங்கள் தொடர்பாக ஏற்பாட்டுக் குழு தீர்மானிக்கும். |

## 1.5 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதி நகர பிதாவிற்கு எரிபொருள் படியொன்று வழங்குவதற்காக சட்ட ஏற்பாடுகள் இல்லாதிருக்கையில் 2018 ஏப்ரல் மாதம் முதல் 2019 திசெம்பர் மாதம் வரை மாதமொன்றுக்கு 200 லீற்றர் டீசல் வீதம் 4200 லீற்றர் டீசலுக்காக ரூபா 418,800 ஆன படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அங்கீகாரமற்ற கொடுப்பனவு பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பேரில் உரிய கொடுப்பனவு மேற் கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2018 ஆகஸ்ட் 29 ஆந் திகதியிடப்பட்ட 2086/15 இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பிரகாரம் நகர பிதாவின் தனிப்பட்ட பதவியணியின் பிரத்தியேக செயலாளர் மற்றும் பொதுமக்கள் இணைப்பாளர் ஆகிய இருவருக்கும் ரூபா 25,000 இற்கு உட்படக்கூடிய வகையில் மாதாந்தம் கொடுப்பனவு செய்ய முடியுமாக இருந்த போதும் 2018 ஆகஸ்ட் முதல் 2019 திசெம்பர் வரை மாதாந்தம் ரூபா. 35,000 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் அவ் வர்த்தமானியின் பிரகாரம் சட்ட ஏற்பாடுகள் இல்லாதிருக்கையில் பிரத்தியேக செயலாளருக்கு 2019 | வர்த்தமானியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலதிக கொடுப்பனவு அறவிடப்பட வேண்டும். | சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பேரில் உரிய கொடுப்பனவு மேற் கொள்ளப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | ஏப்ரல் முதல் மாதாந்தம் ரூபா. 5,000 வீதம் தொலைபேசிக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | மாகாண நிர்வாக நிறுவனங்களில் சேவை புரியும் சேவை ஊழியர்களுக்கு மற்றும் மாகாண அரச சேவை ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்குவதற்கு மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) 188 (அ) இலிருந்து (ஞ) வரையான பிரிவில் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் மற்றும் விடயப் பொறுப்பான அமைச்சரிடம் அல்லது ஆளுனரின் பூரண அங்கீகாரமின்றி 32 உத்தியோகத்தர்களுக்கு 2018 ஆம் ஆண்டிற்கான ஊக்குவிப்பு கொடுப்பனவாக ரூபா. 3,496,082 செலுத்தப்பட்டிருந்தது. | கொடுப்பனவுகள் செலுத்தப்பட முறையான அங்கீகாரம் பெற வேண்டும். | சபையின் அங்கீகாரத்தின் கீழ் கொடுப்பனவு மேற் கொள்ளப்பட்டிருந்தது. எதிர்வரும் காலங்களில் ஆளுனரின் அங்கீகாரத்தை பெற நடவடிக்கை எடுக்கப்படும். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக மாநகர சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 47,891,094 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,113,853 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 138,211,000 | 78,224,708 | 81,590,115 | 92,701,898 | 65,500,000 | 68,552,914 | 63,301,193 | 90,919,302 |
| (ii) | வாடகை | 97,096,000 | 26,371,089 | 41,981,929 | 49,905,016 | 24,650,000 | 25,332,031 | 19,906,664 | 47,135,639 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 44,422,000 | 15,951,670 | 38,187,004 | 1,844,515 | 15,000,000 | 15,632,224 | 14,698,340 | 3,133,877 |
| (iv) | ஏனைய வருமானம் | 59,965,130 | 50,000,000 | 386,135,044 | 28,641,342 | 40,573,246 | 40,573,246 | 74,615,304 | 28,905,061 |
| | மொத்தம் | 739,694,130 | 170,547,467 | 547,894,092 | 173,092,771 | 145,723,246 | 150,090,415 | 172,521,501 | 170,093,879 |

### 2.2.2 வரி மற்றும் வீதவரி

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2009 ஆம் ஆண்டில் மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டில் வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட காலத்தினுள் வீத வரி சீர்திருத்தம் செய்யப்படல் வேண்டும். | மாநாகர சபை இவ்வீதவரி பிரதேசத்தை வரைபடமாக்கியுள்ளது. |
| (ஆ) | வருடாந்த வீதவரி பட்டியலிடல் ரூபா 79,367,023 ஆக இருந்த போதும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ரூபா 91,011,029 ஆக இருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலுவையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் |

### 2.2.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் வருடாந்த பட்டியலிடப்பட்ட கடை வாடகை ரூபா. 20,242,227 ஆக இருந்தாலும் 2019 திசெம்பர் 31 இல் நிலுவையாகவிருந்த கடை வாடகை ரூபா. 43,592,735 ஆகவிருந்தது. | நிலுவை வாடகை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சபைக்கு கையளிக்கப்பட்டு சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பேரில் ஏனைய நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் வருடாந்த பட்டியலிடப்பட்ட பொதுக் கடைகளின் வாடகை ரூபா. 5,828,871 ஆக இருந்தாலும் 2019 திசெம்பர் 31 இல் நிலுவையாகவிருந்த பொதுக் கடைகளின் வாடகை ரூபா. 3,579,252 ஆக இருந்தது. | நிலுவையாக இருந்த வாடகை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சபைக்கு கையளிக்கப்பட்டு சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பேரில் ஏனைய நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (இ) | சபைக்குச் சொந்தமான 05 வருடங்களுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய I ஆம் II ஆம் கட்ட கடைகள் மற்றும் ஏனைய கடைகளுக்கான 1999 ஆம் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு வாடகை அறவிடப்பட்டுக் கொண்டிருந்தது. | புதிய மதிப்பீட்டின் பிரகாரம் விரைவாக வாடகை அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2020 ஜனவரி மாதம் தொடக்கம் மகா சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள தற்காலிக ததிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டண நிலுவை ரூபா. 1,193,675 ஆகவிருந்தது. | மாநகர சபை கட்டளை சட்டத்தின் (252) ஆம் அதிகாரத்தின் கீழ நடவடிக்கை எடுக்கப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மீளாய்வாண்டின் வியாபார அனுமதிப்பத்திர நிலுவை தீர்மானிப்பதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படாத நிறுவனங்களிற்கு தற்போது வழக்குத் தொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2019 திசெம்பர் 31 அன்று அறவிடப்பட வேண்டிய நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 674,975 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா. 25,189,888 ஆகவிருந்தது. | பெற வேண்டிய சக முத்திரைக் கட்டணத்தினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பொருத்தமான திட்டமொன்றை தயாரித்து அறவிடப்பட வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தினை பெற்றக்கொள்ள நடவடிக்கை எடுப்பேன் |

03. **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **செயலாற்றல்**

மாநகர சபைகள் சட்டத்தின் 04 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) **உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் பிரிவின் கீழ் 34 பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக செயல் நடவடிக்கை திட்டம் பிறப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 வரை பிறப்பிக்கப்பட்டிருந்த உப விதிகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பல்வேறு விடயங்களின் கீழ் திட்டம் வரைவுபடுத்தப்பட்டுள்ளதுடன் இருக்கின்ற குறைகளை சீர் செய்ததன் பின் ஆளுனரின் அங்கீகாரத்தைப் பெற சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

(ஆ) **செயற்பாடுகள் மற்றும் பணிகள் நிறைவேற்றாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் மாநகர மிருக வைத்திய சங்கத்தின் நிறைவேற்ற வேண்டியிருந்த 04 அடிப்படை செயற்பாடுகள் மற்றும் அது தொடர்பான 16 உப செயற்பாடுகள் நிறைவேற்றப்படவில்லை. | உரிய பிரிவு மூலம் நிறைவேற்ற வேண்டியிருந்த செயற்பாடுகள் நிறைவேற்றப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாநகர மிருக வைத்திய சங்கத்தின் செயற்பாடுகளில் ஒரு பகுதி நிறைவேற்றப் பட்டுள்ளது. |
| (ii) | பொது மக்கள் சுகாதார பரிசோதகர்களால் நிறைவேற்றப்பட வேண்டிய எஞ்சிய வேலைத்திட்டம் அங்கீகரிக்கப்படாததுடன் மீளாய்வாண்டின் உணவு பாதுகாப்பு தொடர்பான செயற்பாடுகள் மற்றும் பணிகள் நிறைவேற்றப்படவில்லை. | செயற்பாடுகள் நிறைவேற்றப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட அறிவுருத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

(இ) **திண்மக்கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் சேர்கின்ற குப்பை கிழக்கு நுவரகம்பலாத பிரதேச சபைக்கு சொந்தமான கிரிக்குளம கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு அகற்றப்பட்டிருந்ததுடன் முறையற்ற கழிவுப் பொருட்கள் அகற்றப்பட்ட காரணத்தால் பிரதேச மக்களின் எதிர்ப்பு மற்றும் இடம் பெறுகின்ற வழக்கு காரணமாக அவ்விடத்திற்கு கழிவுப் பொருட்கள் அகற்றப்படுவது நிறுத்தப்பட்டிருந்தது. மேலும் சேர்ந்திருந்த பொலித்தின் மற்றும் பிளாஸ்டிக் போன்ற உக்கலடையாத கழிவுகள் அவ்விடத்தில் மலை போல் குவிக்கப்பட்டிருந்தது. | கழிவுப்பொருள் முகாமைத்துவ திட்டமொன்று தயாரிக்கப்பட்டு கழிவுப்பொருள் முகாமைத்துவம் முறையாக நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சேர்கின்ற உக்கலடையும் கழிவுகள் தம்புள்ள நகர சேதனப் பகுதிக்கு அனுப்பவும் உக்கலடையாத கழிவுகள் புத்தளம் INCC ECOCYCLE LANKA நிறுவனத்திற்கு அனுப்பவும் கிரிக்குளம் கழிவுகள் மண் இட்டு மூடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

(ஈ) **சுற்றாடல் பிரச்சினைகள்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- | --- |
| (i) | கூம்பிச்சன்குளம் குளத்தில் சதுப்பு நீரை மல்வத்து ஓயாவிற்கு வெளியேற்றும் கால்வாயின் இருபுறமும் உள்ள சேவை பாதைகள் தடைப்படும் வகையில் பெரிய அளவிலான அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்கள் இருந்தன. தனியார் நிறுவனமொன்றின் மூலம் கால்வாயின் கரையில் கொங்கிறீட் தூண்களைப் பயன்படுத்தி அதன் மீது கட்டுகள் மற்றும் சுவர்கள் நிர்மாணிக்கப்பட்டு கால்வாயின் பாதுகாப்பு சட்டவிரோதமாக ஆக்கிரமித்திருந்ததால் சேவை பாதைகள் இழக்கப்பட்டிருந்ததுடன் அது கால்வாயின் இருபுறமும் வாழும் மக்களுக்கு கடுமையான சமூகப் பிரச்சினையாக மாறியது. | சட்டவிரோத நிர்மாணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கூம்பிச்சன்குளம் குளத்தில் மல்வத்து ஓயாவிற்கு பாய்கின்ற கால்வாய்ப் பாதை மற்றும் அங்கு சேவை பாதை தடுக்கப்பட்டமை இனங்காணப்பட்டு அவ்விடங்களில் காணப்பட்ட நிர்மாணங்கள் அகற்றப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | பரபல ஹோட்டல் உரிமையாளர்களால் உல்லாசப் பிரயாணிகளுக்காக படகு சவாரி ஏற்பாட்டிற்காக மல்வத்து ஓயா பாதுகாப்பு நிலம் | மல்வத்து ஓயா மற்றும் பாதுகாப்பு நிலத்தில் அனுமதியற்ற | இவ் ஹோட்டல் மற்றும் படகு சவாரி தொடர்பாக அங்கீகாரம் பெற நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் பாதுகாப்பு நிலங்களில் நிர்மாணிக்கப்பட்ட ஹோட்டல்களிற்காக நகர சபையில் அல்லது நீர்ப்பாசணத் திணைக்களத்தில் அங்கீகாரம் பெறப்படவில்லை. மேலும் படகு சவாரிக்காக நகர சபையில் வியாபார அனுமதிப் பத்திரம் பெறப்படவில்லை. | செயற்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (iii) | பல வாடிவீடுகளில் உள்ளக சுத்திகரிப்பு வடிவமைப்புத் திட்டத்துடன் இனங்காததால் அவ் வாடிவீடுகளில் சுகாதார பிரச்சினைகள் எழுந்தன. | வாடிவீடுகளில் சுகாதார வசதிகள் முறையாக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விடுதிக் கட்டடங்களாக அங்கீகரிக்கப்பட்ட தனியார் இடம் பின்னர் தேவைக்கு ஏற்ப வியாபார நடவடிக்கை களுக்காக பொருத்தமான விதத்தில் திடட்மிட தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iv) | நகர சபை மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகின்ற நகர பிரதேச விளையாட்டு மைதானத்தை இணைக்கும் வகையில் குறுக்காக பாதை அமைக்கப்பட்டு மைதானத்தின் ஒரு பகுதி அனுமதியற்ற குடியிருப்பாளர்களால் கைப்பற்றப்பட்டு வியாபாரம் மற்றும் நிர்மாணங்களினால் உடற்பயிற்சி வசதிகளுக்காக பொது மக்களுக்கு கிடைத்திருந்த வசதியை இழக்கப்பட்டுள்ளது. | அனுமதியற்ற கைப்பற்றல்கள் மற்றும் நிர்மாணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முறையற்ற விதத்தில் நிர்மாணங்கள் தொடர்பாக ஈடுபடுத்தப்பட்டிருந்த அங்கீகாரமற்ற நிர்மாணங்களின் கீழ் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (v) | நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 1985 மார்ச் 20 ஆம் திகதி இலக்கம் 8/1/38 உடைய சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட கட்டடத் திட்டத்திற்கு இணங்காமையினால் 09 ஆவது புரகல பெதெச இலக்கம் 460 C உடைய இடத்தில் நிர்மாணப் பணிகள் இடம்பெற்றிருந்தது. | திட்டங்களுக்கு இணங்காத நிர்மாணங்கள் தொடர்பாக சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

## (உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபையினால் ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் பிரகாரம் அடைந்து கொள்ளக்கூடிய நோக்கங்கள் மற்றும் இலக்குகள் நியதிகளை உருவாக்குவதற்கு கையளிப்பு | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் பாதீட்டில இந்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்க்ள மற்றும் இலக்கு நியதிகளை அடைந்து கொள்வதற்கு நிதிஏற்பாடு ஒதுக்கீடு |

| | | |
|---|---|---|
| செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | செய்யப்பட்டுள்ளது. |

3.2 **முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கிரிக்குளம் பிளிசரு திட்டம் தொடர்பாக பயன்படுத்தப்பட்டிருந்த எக்ஸ்கவேட்டர் இயந்திரம் தீப்பற்றியமை தொடர்பாக இடம்பெற்ற ஆரம்ப விசாரணையில் இனங்காணப்பட்ட 3.3 மில்லியன் ருபாய் நட்டத்தில் நான்கில் ஒரு பகுதி பெறுமதியான ரூபா. 825,000 உரிய அதிகாரிகளிடம் அறவிடப்படவில்லை. | மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் செயற்பட்டு உரிய நபரிடம் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இப் பிரச்சினை தொடர்பாக இடம்பெற்ற மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் இழப்புப் பணம் உரிய அதிகாரியிடம் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) முன்னால் நகர ஆணையாளர் 2016 ஜுன் மாதம் இடம் மாற்றம் பெற்று அதிலிருந்து 2020 ஜுன் மாதம் வரை உத்தியோகபூர்வ இல்லத்திலீருந்து வெறியேறி இருந்ததுடன் அக் காலத்தில் வாடகை மற்றும் அபராத வாடகை அறவிடப்படவில்லை. | உத்தியோகபூர்வ இல்லத்தை மீண்டும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | நகர ஆணையாளருக்கு ஒதுக்கப்பட்ட உப அட்டவணைப்படுத்தப்பட்ட வீட்டில் குடியிருந்த முன்னால் நகர ஆணையாளர் 2016 ஜுன் மாதம் தொடக்கம் மாகாண சமூக சேவை திணைக்களத்திற்கு இடம் மாற்றம் பெற்றுள்ளார். மாகாண சமூக சேவை பணிப்பாளர், நகர ஆணையாளராக வந்திருந்ததுடன் இரு உத்தியோகத்தர்களினதும் இணக்கத்துடன் இரு உத்தியோகபூர்வ இல்லங்களிலும் குடியிருந்ததுடன் மாகாண சமூக சேவை பணிப்பாளராக பதவியேற்ற உத்தியோத்தரிடம் அக் காலத்திற்குரிய உத்தியோகபூர்வ இல்ல வாடகை அறவிடப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2012 தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை இடம் பெற்றிருந்த இரு நிதி முறைக்கேடுகளில் சபை நிதியத்திற்கு ரூபா. 47,174,493 என மதிப்பிடப்பட்ட நிதி இழப்பை மீட்க சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்படவில்லை. | உரிய மதிப்பீடுகள் விரைவாக முடிக்கப்பட்டு பொறுப்பான தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் மற்றும் சபைக்கு ஏற்பட்ட இழப்பை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பான மதிப்பீட்டு நடவடிக்கைகள் இடம்பெற்ற வருவதுடன் உரிய நிதி இழப்பு திட்டமாக இனங்காணப்படவில்லை. |
| (ஈ) | அநுராதபுர மாநகர சபையில் சேவை புரிந்து 2013 இல் வேறு நிறுவனமொன்றிற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஊழியர் ஒருவரிடம் அந்நாளிலிருந்து 2018 ஜுன் மாதம் வரை செலுத்தப்பட்ட ரூபா 1,816,557 சம்பளம் மற்றும் கொடுப்பனவு மீட்பதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உரிய மதிப்பீடுகள் விரைவாக முடிக்கப்பட்டு இழப்பை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பான மதிப்பீட்டு நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதுடன் உரிய நிதி இழப்பை அறவிட இதுவரை தீர்மானம் எடுக்கப்படவில்லை. |

3.3 **மனித வள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடங்களும் மேலதிகமும்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 ஆம் திகதி 70 ஆரம்ப நிலை ஊழியர்கள் அதிகமாகவும் இரண்டாம் நிலையில் 10 பதவிகளுக்கு 60 வெற்றிடங்களும் மூன்றாம் நிலையில் 02 பதவிகளுக்கு 02 வெற்றிடங்களும் மற்றும் சிரேஷ்ட நிலையில் 03 பதவிகளுக்கு 03 வெற்றிடங்களும் இருந்தன. | அத்தியவசிய பதவி வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அநுராதபுர மாநகர சபையில் நாளாந்தம் பாதைகள் மற்றும் காண்கள் சுத்தம் செய்வதற்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்ட பணியாளர் எண்ணிக்கை போதுமானதாக இல்லாததால் அமைய மற்றும் மாற்று ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். |
| (ii) | அமைய சம்பளம் மற்றும் கொடுப்பனவு பெறும் 97 ஊழியர்கள் 25 நிரந்தர பதவிகளில் பணியாற்றுவதற்காக சேர்த்துக் கொள்ளப்பட்டு 2019 ஆம் ஆண்டில் சம்பளம் மற்றும் கொடுப்பனவு வழங்குவதற்காக ரூபா. 44,028,992 செலவிடப்பட்டது. | தற்போதைய பணிகளுக்குத் தேவையான ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்டு சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக 2016 ஆம் ஆண்டிலிருந்து வேண்டுகோள் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தாலும் தேவையான ஊழியர்கள் அங்கீகரிகக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. குறைந்தளவில் வெற்றிடமும் நிரப்பப்படவில்லை. அதனால் இந் நிலைமை எழுந்துள்ளது. |

(ஆ) **ஊழியர் பிணை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| 1991 நவம்பர் 03 திகதியிட்ட 04/1999 ஆம் இலக்க வட மத்திய மாகாண பிரதான செயலாளரின் நிறுவன சுற்றறிக்கையின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் தற்போது சேவையிலுள்ள பிணை வைப்பு செய்ய வேண்டிய உத்தியோகத்தர்களிடம் இருந்து பெற வேண்டிய பிணைத் தொகை ரூபா. 235,000 பெறப்படவில்லை. | குறித்த உத்தியோகத்தர்களின் பிணை வைப்புக்களை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உடனடியாக அறவிடப்பட்டு வைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாநகர சபையினால் உபயோகப்படுத்தப்படும் 10 வாகனங்களின் உரிமையைக் கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த வாகனங்களின் உரிமையைக் கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.4.2 விளைவற்ற சொத்துக்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது மாநகர சபையின் 05 கட்டிடங்களில் நிறுவப்பட்டிருந்த ரூபா 24,200,000 பெறுமதியான 05 சூரிய சக்தி முறைமைகள் 2002 யூன் 22 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டன. | சூரிய சக்தி முறைமைகளை செயற்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

### 3.4.3 வருடாந்த பொருள் மற்றும் இருப்புக் கணிப்பீடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 756 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய காலப்பகுதியில் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2020.08.30 இற்கு முன்னர் கணிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கின்றேன் . |

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மத்திய சுற்றாடல் அதிகார சபையின் இடைநிலைகள் மற்றும் 2019 ஜுன் 05 திகதிய் 2126/36 ஆம் இலக்க 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் விதிமுறைகளுக்கு அமைய எரிக்குமிடங்களில் குப்பைகளை எரிக்கும் நடவடிக்கைகளை கட்டுப்பாட்டுத் தரத்திற்கு அமைய சூழலுக்கு நேசமான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தாலும் குறித்த குறைந்த வெப்பநிலை மற்றும் தக்க வைப்பு நேரத்துடன் செயற்பாட்டை உறுதிப்படுத்தத் தேவையான அளவீடுகள் நிறுவப்படவில்லை. அத்துடன் எரியூட்டியை பயன்படுத்தி கழிவுகளை எரிக்கும் போது சுற்றியுள்ள பகுதி கறுப்புப் புகை மூலம் மூடப்படுவதால் தரப்படுத்தப்பட்ட குறைந்த வெப்பநிலை மற்றும் தக்க வைப்பு நேரத்தில் கழிவுகள் எரிக்கப்படவில்லை என்பது தெரியவந்தது. அதன் படி மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்காத எரிக்குமிடங்கள் மற்றும் அவற்றை உருவாக்க செலவிட்ட ரூபா | இத்தகைய திட்டங்கள் நிலையான தரத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். | கழிவுகள் எரிப்பது தொடர்பாக சுற்றாடல் பிரச்சினைகள் எனக் கருதப்படும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்தாலோசித்து முடிவுகள் எடுப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக அறியத்தருகிறேன். எதிர்வரும் காலங்களில் மாநகர சபைக்கு நிதி இழப்பு ஏற்படாத வகையில் இக் கொடுக்கல் வாங்கல் மற்றும் உரிய திட்டத்தை நிறைவு செய்வதற்காக தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

10,408,232 தொகை பயனற்ற செலவினமாக இருந்தது.

## 3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முன் அலுவலகம் நிர்மாணிக்கும் திட்டத்தில் தொழில்நுட்ப அறிவுடைய அதிகாரிகளின் மதிப்பீட்டுக் குழுவை ஈடுபடுத்தாது விலை சமர்ப்பித்த ஒரே நிறுவனத்திற்கு ரூபா. 7,499,996 இற்கு வழங்கப்பட்டது. | முறையான கொள்முதல் முறைகளைப் பின்பற்ற வேண்டும். | முன் அலுவலகம் நிர்மாணிப்பது தொடர்பாக நகர பொருளியளாளர் மற்றும் சபை தீர்மானத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | முன் அலுவலகத்திற்காக 04 வளிபதனாக்கிகள் கொள்வனவு செய்வதற்கு குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனத்திடம் கொள்வனவு செய்வதற்காக கொள்முதல் குழு பரிந்துரைக்கப்பட்டிருந்ததுடன் கூடிய விலை சமர்ப்பித்த நிறுவனத்திடம் கொள்வனவு செய்ததால் ரூபா. 173,356 நிதி இழப்பு ஏற்பட்டது. | பெறுகை குழுவின் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

## 3.7 இனங்காணப்பட்ட இழப்புக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பெறுமதி கூட்டப்பட்ட வரிகளுக்கு (VAT) ஈடு செய்ய வேண்டிய 2019 ஜனவரி தொடக்கம் ஜூலை வரையான காலத்தில் செலுத்தப்பட்ட (VAT) வரி ரூபா. 374,913 மீளச் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட காலத்தில் மீளச் செலுத்தப்பட வேண்டும். | மீளாய்வாண்டிற்காக கொள்வனவு செய்யப்பட்டாலும் உரிய கொடுப்பனவு அதன் பிறகு செய்யப்படும். சபையில் சில சந்தர்ப்பங்களில் நிகழ்கின்ற நிதி நெருக்கடி காரணமாக வழங்குனர் களுக்கான கொடுப்பனவு தாமதமானது. எனவே ஒரு வருடத்திற்கும் மேலாக இருந்த பட்டியல்களின் பெறுமதி VAT வரி செலுத்தும் நேரத்தில் திருப்பிச் செலுத்த முடியாது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாகான உயன வாய்க்கால் அமைப்பை நிர்மாணிப்பதற்கு உரிய கொடுப்பனவின் போது உரிய முற்பணத் தொகை பூரணமாக அறவிடப்படாமையால் ரூபா. 307,454 இழப்பு ஏற்பட்டிருந்தது. | உரிய இழப்பு பொறுப்பான தரப்பினரிடம் அறவிடப்பட வேண்டும். | ஆரம்ப மதிப்பீடொன்று நடத்தப்பட்டு மீதித் தொகை பொறுப்பான தரப்பினரிடம் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

04. **கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

4.1 **உள்ளகக் கணக்காய்வு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| வட மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2015 மார்ச் 18 திகதியிடப்பட்ட இலக்கம் 04/2015 உடைய சுற்றறிக்கையின் 06 ஆவது பந்தியின் பிரகாரம் நேரடியாகப் பொறுப்பேற்றுள்ள ஒரு உள் கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டு அறிக்கை பெறப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அநுராதபுர மாநகர சபையில் உள்ளக கணக்காய்வுப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. எனினும் உள்ளக கணக்காய்வு அறிக்கை அரச கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படாமையால் எதிர் காலத்தில் அனுப்பிவைக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

4.2 **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுக் கூட்டம் நடைபெறவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழுக் கூட்டம் குறைந்தது காலாண்டிற்கு ஒரு முறையாவது நடத்தப்பட வேண்டும். | உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தருக்கு கணக்காய்வு முகாமைக் குழுவொன்று நிறுவப்பட்டு செயற்படுத்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

4.3 **தீர்வு செய்யப்படாத அவதானிப்புக்கள் மற்றும் பதிலளிக்கப்படாத ஐய வினாக்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2016-2020 காலகட்டத்தில் வழங்கப்பட்ட ரூபா. 127,945,772 அளவிடக்கூடிய நிதிப் | கணக்காய்வுக் விசாரணைகள் தொடர்பாக குறித்த | முறையான கணக்காய்வுக் ஐய வினா பதிவேடொன்று இல்லாமையால் நிலுவையாக |

| | | |
|---|---|---|
| பெறுமதியுள்ள 21 கணக்காய்வுக் கேள்விகள் தொடர்பாக 2020 மே 27 வரை பதிலளிக்கப்படவில்லை. | காலத்தில் பதிலளிக்கப்பட வேண்டும். | உள்ள கணக்காய்வுக் கேள்விகள் தொடர்பான தகவல்கள் பெற முடியாமலிருப்பதுடன் 2018 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கணக்காய்வு விசாரணைகள் தொடர்பாக பதிலளித்தல் இடம்பெறுகின்றது. |